# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஏப்ரல் 13, 2024 Weekly E-paper • April 13, 2024


# அடாவடித்தனத்தின் மறுபெயர் அண்ணாமலை!

சுப. வீரபாண்டியன்



## தேர்தல் களத்தில் பேரவை

## அண்ணல் அம்பேத்கர் அவர்களே!

தலையங்கம்

## வேண்டாம் கருவேலமும், மோடியின் ஆட்சியும்!

எழில்.இளங்கோவன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஏப்ரல் 13, 2024    Weekly E-paper ● April 13, 2024


# அடாவடித்தனத்தின் மறுபெயர் அண்ணாமலை!

**சுப. வீரபாண்டியன்**

தேர்தலே இன்னும் முடியவில்லை. வாக்குகள் எண்ணிக்கை நடைபெறவில்லை. ஆட்சிக்கு வரும் கனவு மிகத் தொலைவில் கூட இல்லை. ஆனாலும் அண்ணாமலை மற்றும் அவர் சார்ந்திருக்கும் பாரதிய ஜனதா கட்சியின் அடாவடித்தனங்கள் ஆரம்பமாகிவிட்டன.



கோவைத் தொகுதியில் நாடாளுமன்ற வேட்பாளராகப் போட்டியிடும் பாஜகவின் மாநிலத் தலைவர் அண்ணாமலை, இரண்டு நாள்களுக்கு முன்பு அத்தொகுதியில் உள்ள ஆவாரம்பாளையம் என்னும் பகுதிக்கு வாக்குகள் கேட்கச் சென்றிருக்கிறார். எப்போது தெரியுமா? இரவு 10:30 மணிக்கு மேல். இரவு 10 மணிக்கு மேல் எந்தத் தேர்தல் பரப்புரையும் நடைபெறக் கூடாது என்று கூறுகிறது தேர்தல் நடத்தை விதி. ஆனால் இவரோ அந்த இடத்திற்கே பத்து முப்பது மணிக்குத்தான் வருகிறார். அதற்குப் பிறகு தன் பரப்புரையைத் தொடங்குகிறார்.

அப்போது அங்கு வந்த திமுகவினர் சிலர், ஒலிபெருக்கியைத் துண்டித்து விட்டுப் பிறகு பேசுங்கள் என்று சொல்கிறார்கள். அப்போது அங்கு என்ன நடந்தது என்பதை எல்லா ஏடுகளும் ஊடகங்களும் நமக்குத் தெரிவிக்கின்றன!

அண்ணாமலையுடன் வந்த ஆர்எஸ்எஸ் குண்டர்கள் உடனே திமுகவினரைத் தாக்குகின்றனர். காவல்துறையினர் தடுத்து நிறுத்தாமல், சமாதானம் பேசுகின்றனர். கோவையில் உள்ள காவல்துறை, பல நேரங்களில் அரசின் காவல்துறையாக இல்லாமல், ஆர்எஸ்எஸ் இன் காவல்துறையாக இருக்கிறது என்று நண்பர்கள் குற்றம் சாற்றுவார்கள்! அது உண்ம மதானோ என்று எண்ணத் தோன்றுகிறது.

திமுகவினரைத் தாக்கிய சிலர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அண்ணாமலையின் மீதும் வழக்கு பதிவாகி இருக்கிறது. ஆனாலும் அண்ணாமலையின் அடாவடித்தனங்கள் குறையவில்லை. தேர்தல் நடத்தை விதி தனக்குப் பொருந்தாது என்பது போல அவர் நடந்து கொள்கிறார்.

எல்லாவற்றுக்கும் ஏப்ரல் 19 அன்று கோவை மாநகர மக்கள் விடை சொல்வார்கள். அண்ணாமலையின் தோல்வி உறுதி செய்யப்பட்டதுதான் என்றாலும், அவர் தன் கட்டுத்தொகையையும் இழந்தார் என்று வரப் போகும் செய்திதான் அடாவடித்தனத்திற்கு எதிரான, ஜனநாயகத்திற்கு ஆதரவான வெற்றிச் செய்தியாக அமையும்! அமையட்டும்!! ●


வாக்களியுங்கள் திமுக கூட்டணிக்கு

# தேர்தல் களத்தில் பேரவை

நடைபெற இருக்கும் 19-04-2024 நாடாளுமன்றத் தேர்தலையொட்டித் திராவிட இயக்கத் தமிழர் பேரவையினர் தேர்தல் பரப்புரை, களப்பணியில் செயல்பட்டு வருகிறார்கள். சிவகங்கை, மதுரை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கோவை, நீலகிரி, பொள்ளாச்சி, திண்டுக்கல் ஆகிய பகுதிகளில் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன் அவர்கள் பரப்புரையை முன்னெடுத்து வருகிறார். அவருடன் திராவிட நட்புக் கழகத் தலைவர் சிங்கராயர், திராவிட முழக்கம் பொறுப்பாசிரியர் குமரன்தாஸ், பேரவையின் துணைப் பொதுச் செயலாளர் இராம. வைரமுத்து, கொ.ப.செ. வேடசந்தூர் ரவி, மாநில இளைஞரணி அமைப்பாளர் நெல்லை சந்தானம், திராவிட மாணவர் பேரவை அமைப்பாளர் நெல்லை பாபு, ஸ்டுடியோ சரவணன், நவில், அமர்நாத், பிரவீன், மணி, சொக்கலிங்கம், கார்த்திக், பகலவன், பிரபாகரன், வீரகணேசன், கருப்பையா, மருத்துவர் சந்திரன் உள்ளிட்ட தோழர்கள் உடன் இருந்தனர். கூடுவாஞ்சேரி பகுதிகளில் தாம்பரம் இளங்கோ, முத்துக்குமார், மைலாப்பூர் பகுதிகளில் திராவிட நட்புக் கழகத் தோழர்கள் களப்பணியாற்றி வருகின்றனர். இவை குறித்த சில நிழல்படங்கள் இதோ!



















*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## அண்ணல் அம்பேத்கர் அவர்களே!

அண்ணல் அம்பேத்கர் அவர்களே வணக்கம். நாளை ஏப்ரல் 14, உங்கள் பிறந்தநாள். எங்கள் 'கருஞ்சட்டைத் தமிழர்' களின் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அண்ணலே! மதவாதம், இனவாதம், சாதியவாதம், சர்வாதிகாரம் உள்ளிட்ட கொடுமைகளை எதிர்த்து மக்களுக்காக, சமத்துவத்திற்காக உங்கள் நண்பர் தந்தை பெரியாருடன் போராட்டங்கள் நடத்தினீகள். கடந்த 10 ஆண்டுகளில் இவைகளைச் சீரழித்த நரேந்திர மோடி, மீண்டும் பிரதமராக ஆகவேண்டும் என்று கடந்த 10ஆம் தேதி வேலூர் பிரச்சாரத்தில் பேசினார்.

அண்ணலே, தமிழ் தெரியவில்லையே என்று வருந்துகிறேன் என்று (மகிழ்ச்சியுடன்) வேலூரில் பேசினார்.

அயர்லாந்தைச் சேர்ந்த ராபர்ட் கால்டுவெல், கனடாவைச் சேர்ந்த ஜி.யு.போப், இத்தாலியைச் சேர்ந்த ஜோசப் பெஸ்கி (வீரமாமுனிவர்) போன்ற அயலவர்கள் எல்லாம் இங்கு வந்து தமிழ்படித்துத் தேர்ந்தார்கள். ஆனால் இங்கே இருக்கும் மோடிக்குத் தமிழ் தெரியவில்லையாம், வருந்துகிறாராம். என்னே உலக மகா நடிப்பு!

தி.மு.க ஊழலுக்குக் 'காப்பிரைட்' டாம், சொன்னார் மோடி. அங்கே அவர் தேர்தல் பத்திர ஊழல் குறித்து வாயேதும் திறக்கவில்லையே ! ஏன்? 'பிஎம்' கேர் ஊழலைப் பற்றிப் பேசவே பதறுகிறார் மோடி. அவை மோடிக்கு ஊழலாகத் தெரிய வில்லையா?

தமிழ்நாட்டில் தி.மு.க ஆட்சியில் பள்ளிக் 'குழந்தை' களிடம் எல்லாம் போதைப்பொருள் புழக்கத்தில் இருக்கிதாம். ஒரு பிரதமர் பேசக்கூடிய பேச்சா இது! போதைப் பொருள்களின் குடோனாக குஜராத் அல்லவா திகழ்கிறது. இதுவும் அவருக்குத் தெரியாமலா இருக்கிறது!

மொழியாலும், மதத்தாலும், ஜாதியாலும் தி.மு.க மக்களைப் பிரிக்கிறதாம். மோடி தன்னை நினைத்துக் கொண்டே இப்படிப் பேசுகிறார், என்பது தெளிவாகத் தெரிகிறது.

கச்சைத் தீவை காங்கிரஸ் கட்சி இலங்கைக்குத் தாரைவார்த்து விட்டது என்று நீலிக்கண்ணீர் வடித்த அவர், அவரின் கடந்த 10 ஆண்டுகால ஆட்சியில் ஏன் அதை மீட்கவில்லை என்பதைப் பற்றி மூச்சே விடவில்லை மோடி!

தமிழ்நாட்டு மீனவர்கள் கடலில் சிங்களர்களால்கொடுமைக்கு ஆளாகிறார்கள் என்று அங்கே பேசினார் மோடி. உண்மைதான்!அந்தக் கொடுமையை ஏன் தடுக்கவில்லை பிரதமர். அதுகுறித்து ஏன் வாய்திறக்கவில்லை, அவர்.

தி.மு.க பெண்களை இழிவு படுத்துகிறதாம் சொன்னார் மோடி, வேலூரில். மணிப்பூரில் பெண்கள் நிர்வாண நிலையில் அவமானப் பட்டார்களே, யாரால் என்பதைச் சொல்வாரா அவர்? உலகம் சுற்றும் மோடி இன்றுவரையும் மணிப்பூருக்குள் நுழையவில்லையே?

பெருமகனாரே! இப்படியும் ஒரு பிரதமர் எங்களுக்கு வாய்த்து விட்டார். மக்களையும், சமத்துவத்தையும், பேணிய உங்கள் வழியில் நின்று, உங்கள் தோழர் பெரியார் அவர்கள் வழிநின்று ஜனநாயகம் காப்பாற்றப்பட, சர்வாதிகாரம் வீழ்த்தப்பட மோடியின் ஆட்சியை வீழ்த்தி, இந்திய அரசியல் சாசனத்தைக் காக்க 'இந்தியா கூட்டணி'யை வெற்றி பெறச் செய்வோம்!

அடுத்த உங்கள் பிறந்த நாள் வாழ்த்தை நம்முடைய 'திராவிட மாடல்' 'இந்தியா கூட்டணி' ஆட்சியில் சொல்கிறோம்!

அண்ணல் அம்பேத்கர் அவர்களே! மீண்டும் உங்களுக்கு எங்கள் பிறந்த நாள் வாழ்த்துகள்!




ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
ஆசிரியர் குழு:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**
இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# வேண்டாம் கருவேலமும், மோடியின் ஆட்சியும்!

**எழில்.இளங்கோவன்**

தொலைக் காட்சியில் ஒரு செய்தியைப் பார்க்க வியப்பாக இருந்தது. ராமநாதபுரம் தொகுதி நிலவரம் பற்றிக் கூறும் போது, கமுதி அதன் சுற்று வட்டாரங்களில் கருவேல மரங்கள் அடர்ந்து, பரந்து இருப்பதால் அதனை அழித்து நிலங்களைக் காக்க வேண்டும் என்று தொகுதி மக்கள் கோரிக்கை வைப்பதாக அச்செய்தி சொல்லியது.

கருவேல மரங்களின் வேர்கள் நிலத்தின் ஆழத்தில் பரந்து சென்று, நீரை உறிஞ்சி விடுவதால் பிற செடிகொடி வகைகள் அங்கு வளர முடியாமல் அழிந்து விடுகின்றன். முட்கள் நிறைந்த இந்த மரங்களால் பறவைகளுக்குக் கூட எந்தப் பயனும் இல்லை! வேடந்தாங்கலில் இதன் முட்களால் உடல் கிழிந்து இறந்த பறவைகள் ஏராளம். மேலும், இம்மரங்கள் சுற்றுச்சூழலில் வெப்பநிலையை அதிகரிக்கிறது. இவை வெளியிடும் கதிர்வீச்சினால் சுற்றியுள்ள உயிரினங்களுக்குப் பலவிதப் பாதிப்புகள் ஏற்படுகின்றன. உதாரணமாக கால்நடைகள் இம்மரங்களின் கீழே தொடர்ந்து கட்டப்படும்போது, மலட்டுத் தன்மை ஏற்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

பா.ஜ.கவின் மோடி ஆட்சியில் அதன் வேர்கள் பொருளாதாரத்தின் ஆழச் சென்றதன் விளைவு ஒன்றியத்தின் பொருளாதாரம் சீர்குலைந்து விட்டது. பணமதிப்பிழப்பு, தேர்தல் பத்திர ஊழல், பி.எம்-கேர் போன்றவையும் கணக்கில் வைத்துப் பார்க்கப்பட வேண்டும்.

அமலாக்கத் துறை, வருமான வரித்துறை உள்ளிட்டவைகளின் மூலம் தனக்கு வேண்டாத எதிர்கட்சியினரை, எதிர்த்துப் பேசுவோரை மிரட்டுவது, கைது செய்து சிறையில் அடைப்பது என்பது கருவேல மரங்களின் கூர்மையான முள்களில் சிக்கி இருப்பது போல இருக்கிறது.

இம்மரங்களால் இயற்கைச் சுற்றுச்சூழல் கெட்டு,





கால்நடைகள் மலட்டுத்தன்மை அடைவதாகச் சொல்லும் ஆய்வைப் போல, கடந்த பத்து ஆண்டுகளில் நாட்டின் சூழல் கெட்டு, மக்களின் வாழ்வும் மலடாகத் தோற்றம் தருவதை மறுக்க முடியாது.

ராமநாதபுரம் தொகுதி மக்களின் கோரிக்கையான உருப்படாத கருவேல மரங்கள் எப்படி அகற்றப்பட வேண்டுமோ, அப்படியே காவி பா.ஜ.க மோடியின் ஆட்சியும் அகற்றப்பட வேண்டும் என்பதும் மிகமிக அவசியம்.

எனவே, வாக்காளப் பெருமக்களே! தி.மு. தலைமையிலான ‘இந்தியா கூட்டணி’க்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்யுங்கள்! ●




